நகர மன்றம், உளுந்தூர்பேட்டை நாள். 21.06.2024

**அறிவிப்பு**

உளுந்தூர்பேட்டை நகரமன்ற சாதாரணக் கூட்டம் 21.06.2024ம் தேதி வெள்ளிக் கிழமை நற்பகல் 12.00 மணியளவில் நகரமன்ற தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகரமன்ற கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**முன்னிலை - திரு. கே. திருநாவுக்கரசு அவர்கள்,**

**நகர மன்ற தலைவர்**

**கூட்ட நிரல்**

| வ.எண் | பொருள்கள் ஜூன் 2024 சாதாரணக் கூட்டம் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | **திருவள்ளுவர்**<br><br>இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் திருவள்ளுவர் என்று யார் கூறியது? அவர் இன்னமும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார். வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தவர், அவர் வழங்கிய குறட்பாக்கள் உள்ளவரையில் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்.<br><br>முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டமாகவும், குமரி முனையில் அய்யன் வள்ளுவன் சிலையையும் நிறுவி குறளோவியமாகவும் தமிழ் என்ற குருதியோட்டம் ஓடும் வரை நிலை நிறுத்தினார். (1330 குறள்)<br><br>தமிழ்நாடு மட்டும் அல்ல, இந்தியா மட்டும் அல்ல இன்றைய நாளில் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதோடு உலகளவிலே அய்யன் வள்ளுவனின் முப்பால் குறட்பாக்கள் | 278 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டு தமிழின் பெருமையை உலகளவில் போற்ற செய்த அய்யன் வள்ளுவனை வணங்கி, வள்ளுவர் திருவுருவப்படத்தை இந்நகரமன்ற அவையிலே வைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கப்படுகிறது.

## மகாத்மா காந்தி

அஹிம்சை, சத்தியம், உண்மை, அன்பு இவற்றின் மொத்த உருவமாக வாழ்ந்து இந்திய விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தி சென்ற ஓர் அற்புத மகான் "மகாத்மா காந்தி" அவர்கள். மகாத்மாவின் தலைமையில் இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் வாழ்ந்த மக்கள் ஜாதி, மத, இன, ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடின்றி, தங்களுடைய வாழ்க்கையையும் தியாகம் செய்து பெற்றது தான் சுதந்திரம். வசதியான குடும்பத்தில் பிறந்த மகாத்மா இந்நாட்டு சுதந்திரத்திற்காக பட்ட பாடுகள், வேதனைகள், சோதனைகள் அனைத்தையும் சாதனைகளாக்கி காட்டியவர். இப்படியும் ஒரு மனிதர், ரத்தமும் சதையும், தோலுமாய் இம்மண்ணில் வாழ்ந்திருக்கிறார் என்று நாம் எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் மகாத்மாவை வணங்கி, மகாத்மா காந்தியின் திருவுருவப்படத்தை இந்நகர மன்றத்தின் அவையிலே வைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கப்படுகிறது.

## அண்ணல் அம்பேத்கர்

கல்வி என்பது மேம்படுத்திக்கொண்டவர்க்கே பிறப்புரிமை என்னும் பேதமையைத் தகர்த்து கல்வியில் பெரியவர் ஆனார் அண்ணல் அம்பேத்கர். கல்வியே மானுடத்தைப் பெருமைக்கு கொண்டு செல்லும் என்பதை அவர் வாழ்வே சொல்லும். டாக்டர் அம்பேத்கர் மேல்படிப்புக்காக பரோடா மன்னரின் உதவியால் அமெரிக்கா சென்று கொலம்பியா பல்கலைக்கழகத்தில் M.A., பட்டதாரியானார், இலண்டன் சென்று M.Sc., D.Sc., போன்ற ஆய்வுப் பட்டங்களைப் பெற்றதுடன்

பாரிஸ்டர் பட்டமும் பெற்று பட்டங்களுக்கே இவர் பெருமை சேர்த்தார். டாக்டர் பட்டமும் பெற்றார்.

அறவோர் என்னும் வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாய்ப் பீமாராவ் ஆசிரியராக விளங்கினார். நன்றிக்கு வித்தாக பீமாராவ் ஆசிரியரின் பெயரையே தமதாக்கிக் கொண்டார். இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கிய சிற்பி.

எழுத்தாளர், பேச்சாளர், சட்ட மேதை, உலகக் கல்வியாளர்களில் ஒருவர், அறிவின் கண்ணுலகமாக விளங்கி வாழ்ந்து வருபவர். தாழ்த்தப்பட்ட, வீழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டுமே இவர் விடிவெள்ளி இல்லை. அனைவருக்குமே இவர் தான் விடிவெள்ளியாகத் திகழ்ந்து வருகிறார். இவர்தான் அண்ணல் அம்பேத்கர். அண்ணல் அம்பேத்கர் அவர்களை வணங்கி அண்ணலின் திருவுருவப்படத்தை இந்நகர மன்றத்தின் அவையிலே வைப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு, மன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**<u>தந்தை பெரியார்</u>**

மதம், சாதி, வகுப்பு அடிப்படையில் எத்தகைய பாகுபாடும் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்க மார்க்சீய, பெரியாரிய, அம்பேத்கரிய நெறியில் தன்னாட்சி உரிமையுடன் கூடிய மொழிவழி மாநிலங்கள் இணைந்த சமதர்மக் குடியரசாக இந்தியக் கூட்டாட்சியை நிறுவ வேண்டும் என்பதற்காக தொடர்ந்து முயன்று வந்தவர், அரசுக் கல்வியிலும், அரசு வேலையிலும் மொத்தம் உள்ள 100 இடங்களையும் அனைத்து வகுப்பினருக்கும் அவரவர் விகிதாச்சாரத்திற்கேற்ப பங்கிட்டு அளிக்கும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதற்காக முழு மூச்சுடன் "ஈ.வெ. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற

சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன் அந்தத் தொண்டு செய்ய, அந்தப் பணி செய்ய யாரும் வராததினால், அத்தொண்டை நான் ஆற்றி வருவதோடு பகுத்தறிவை அடிப்படையாய்க் கொண்டு கொள்கைகளையும், திட்டங்களையும் வகுப்பதற்கே என்னை தகுதி உடையவனாக கருதுகிறேன்." என்று கூறி திராவிடச் சீர்த்திருத்தத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களின் கல்வி, பொருளாதார சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படைக் குறிக்கோளாக பகுத்தறிவு சிந்தனையை பரவச் செய்த தந்தை பெரியார் அவர்களை வணங்கி, தந்தை பெரியாரின் திருவுருவப்படத்தை இந்நகரமன்றத்தின் அவையிலே வைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கப்படுகிறது.

## பெருந்தலைவர் காமராஜர்

தமிழ்நாட்டை ஆண்ட முதலமைச்சர்களுள் முதன்மையானவர் தமிழ்நாட்டிற்காகவும், இந்திய நாட்டிற்காகவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் காமராஜர். இலவசக் கல்வித் திட்டத்தை அறிமுகம் செய்தவர், மதிய உணவு திட்டத்தை நடைமுறைப்படுத்தியவர், மாணவச் செல்வங்களிடையே ஏழை, பணக்காரன் வேறுபாடு இருக்கக்கூடாது என்பதற்காக பள்ளியில் சீருடையை கட்டாயமாக்கியவர். இலவசமாக மாணவர்களுக்கு நோட்டுப்புத்தகங்களை வழங்கியவர். விவசாயத்தின் நலன் கருதி தமிழகத்தில் அணைகளை கட்டியவர். தமிழ்மொழி மீது பற்றுக் கொண்டவர். தந்தை பெரியார் அவர்கள் பச்சைத் தமிழன் ஆட்சி என்று இவரது ஆட்சியை புகழ்ந்தார். காமராஜர் வாழ்நாள் முழுவதும் நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் கடைசி வரை திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்தவர். சுயநலமில்லா தூய உள்ளம் கொண்ட ஈடு இணையற்ற பெருந்தலைவர் காமராஜர். இவரை நாட்டு மக்கள் கர்மவீரர், கருப்பு காந்தி, படிக்காத மேதை என்று சிறப்பு பெயர் வைத்து அழைத்து மகிழ்ந்தனர். பெருந்தலைவர் காமராஜர் அவர்களை வணங்கி, அவரது திருவுருவப்படத்தை இந்நகர மன்ற அவையிலே வைப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு மன்றம்

தீர்மானிக்கப்படுகிறது.

## பேரறிஞர் அண்ணாதுரை

தந்தை பெரியாரின் சீடர், திராவிடக் கொள்கைகளை சட்டமாக்கி அதன்மூலம் தமிழ்நாட்டு மக்களின் கல்வி, பொருளாதார சமூக மேம்பாடுடைய திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற அரசியல் கட்சியை தமிழகத்தில் அறிமுகப்படுத்தியவர். தந்தை பெரியாரின் திராவிட சிந்தனைகளை சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலிக்கச் செய்த கழகக்குரல் அண்ணாவின் குரல். இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில் தான் தி.மு.க. என்கின்ற மாநிலக்கட்சி ஆட்சியைத் தக்க வைத்த கட்சியாகும். இந்தியாவிற்கே வழிகாட்டிய இயக்கம் தி.மு.க. (தமிழர், கன்னடர், தெலுங்கர் – சென்னை மாகானம் என்றிருந்த பெயரை தமிழ்நாடு என்று பெயர் சூட்டி சட்டமன்றத்தில் சட்டமாக்கியவர் அண்ணா அவர்கள். அதனால் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணாவைப்பற்றி குறிப்பிடும்போது தலைவரென்பார், தத்துவமேதை என்பார், நடிகர் என்பார், நாடக வேந்தர் என்பார், சொல்லாற்றல், சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றவர் என்பார். அன்னையென்பார், அருமொழிக்காவலர் என்பார், அரசியல்வாதி என்பார். அத்தனையும் தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர் நெஞ்சித்து அன்பாலே "அண்ணா" என்ற ஒரு சொல்லால் அழைக்கட்டும் என்றே அவர் அன்னை பெயரும் தந்தார் என்று முத்தமிழறிஞர் கலைஞரால் போற்றப்பட்ட பேரறிஞர் பெருந்தகையை வணங்கி, அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்தை இந்நகர மன்ற அவையிலே வைப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு மன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

## முத்தமிழறிஞர் கலைஞர்

நமக்கு கிடைத்திருக்கின்ற அரிய பொக்கிஷம்! – என்றார் தந்தை பெரியார்

தன்னை வெல்வான் தரணியை வெல்வான்! – என்றார் பேரறிஞர் அண்ணா

| | | | |
|---|---|---|---|
| | தமிழ்த்தாயின் தலைமகன் ! – என்றார் இனமானப் பேராசிரியர்<br>அரசியலை கழித்தாலும் – நீ<br>தமிழாய் மிஞ்சுவாய்<br>தமிழை கழித்தாலும் – நீ<br>தலைவனாய் எஞ்சுவாய்<br>உன்னை<br>வாழும் தலைமுறை இசைபாடும்<br>வருகிற தலைமுறை அசைபோடும்<br>நீ வேறு தமிழ் வேறா?<br>எம்மொழி தமிழுக்குச்<br>செம்மொழி பேரிட்டாய்<br>தமிழர் சில போது மறக்கலாம்<br>தமிழ் மறவாது உன்னை ஒருபோதும் – என்றார் கவிப்பேரரசு வைரமுத்து<br>தலைவர்கெல்லாம் தலைவர்!<br>முதல்வர்க்கெல்லாம் முதல்வர்!<br>நவீன தமிழ்நாட்டைச் செதுக்கிய சிற்பி<br>இந்த பூப்பந்தில் வாழும் தமிழர்கெல்லாம் குடும்ப தலைவர்<br>இந்திய நாடே அண்ணாந்து பார்த்த அரசியல் ஞானி<br>முத்தமிழறிஞர் – தமிழனத் தலைவர் கலைஞர் அவர்கள் என்றார் –<br>முதலைமைச்சர் தளதியார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்<br>பல அறிஞர்கள், தமிழார்வளார்கள் – அனைத்திந்தியா தலைவர்கள் பலராலும்<br>இப்படிப் பராட்டப்பட்ட தலைவர் | | |

| | | | |
|---|---|---|---|
| | அரசியலா! திரைப்படமா! நாடகமேடையா!<br>பத்திரிக்கை உலகமா! இலக்கிமா!<br>இப்படி பல பரிணாமங்களில் புகழ்ப்பட்ட தலைவர் நீ தான் களம் கண்ட அனைத்து சட்மன்ற தேர்தல்களிலும் வெற்றியை ஈண்டவர் ஐந்து முறை தமிழ்நாடு முதலமைச்சர் இந்திய திருநாட்டில் பல குடியரசு தலைவர்களை இந்தியப் பிரதமர்களை தேர்ந்தெடுத்தவர் பல அறிய திட்டங்களால் இந்திய திருநாடே திரும்பிப் பார்த்ததோடு நீங்கள் மக்களுக்காக தீட்டிய திட்டங்களை ஒன்றிய அரசு மட்டும் அல்ல, பல மாநிலங்களிலும் செயல்படுத்த வழிகோலிய முதல்வர் நீ இந்திய மாநிலத்தில் உள்ள அனைத்து முதல்வர்களும் சுதந்திர தினம் அன்று கோட்டையில் கொடி ஏற்றுவதற்கு உரிமை பெற்றவர் நீங்கள் அதனால் தான் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர் நீங்கள் என்று பாராட்டுவெதோடு, தமிழக்காகவும், தமிழ்நாடு மக்களுக்காகவும் தான் ஓய்வகத்தில் அறிஞர் அண்ணா உறங்கும் வங்கக் கடலோரம், அண்ணாவின் அருகில் ஒய்வெடுக்க செல்லும் வரை அர்ப்பணிப்புனர்வுளோடு எங்களையும் நதழ தலைமுறைகளையும் கல்வி வேலை வாய்ப்புகளையும் மற்றும் சமூக மாற்றங்களிலும் சமத்துவம் கண்ட சமத்துவப் பெறியாளர் நீங்கள் இப்படிப்புகழப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு பெற்று, 101-வது ஆண்டை பிறந்த நாளாக கொண்டாடி வரும் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்கி முன்னாள் கழகத் தலைவர், முன்னால் முதலமைச்சர் "கலைஞர்" அவர்களின் திருவுருவப்படத்தை இந்நகர மன்ற அவையிலே வைப்பதற்கு மன்றம் அனுமதிக்கப்பட்டு, ஏகமனதாக தீர்மானமாக தீர்மானிக்கப்பட்டது.<br><br>**<u>முதலமைச்சர் தளபதியார் திரு. மு.க. ஸ்டாலின்</u>:**<br><br>உழைப்பு உழைப்பு உழைப்பு<br>உழைப்பென்றால் அது மு.க.ஸ்டாலின் தான் என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். | | |

| | | | |
|---|---|---|---|
| | சுயமரியாதைக் கொள்கையில் – தந்தை பெரியார்<br>இனமான எழுச்சியில் – பேரறிஞர் அண்ணா<br>இயக்கத்தை வழி நடத்துவதில் – தமிழினத் தலைவர் கலைஞர்<br>மொழி உரிமையில் – இனமான பேராசிரியர்<br>இந்த நாள்வரின் நிழற்குடையில் நிற்பவன் நான். இவர்கள் தான் என்னை செதுக்கிய சிற்பிகள் என்றார் மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.<br><br>உங்களில் ஒருவன் என்றார். கழகத் தொண்டர்களில் முதல் கழகத் தொண்டன் என்று கூறியதோடு தொண்டர்களோடு தொண்டராக களம் இறங்கி அரசியலில் பல வெற்றிகளைக் குவித்தவர் தான் முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.<br><br>1989-ல் முதல் சட்டமன்ற உறுப்பினர், 1996-ல் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மக்களைல் தேர்ந்தெடக்கப்பட்ட முதல் சென்னை மாநகர மேயர். மேயராக பொறுப்பேற்று சீரழிந்திருந்த சென்னையை சிங்காரச் சென்னையாக மாற்றியவர். தான் மேயராக இருந்தபோது மாநகர அரசு பள்ளிகளில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அடிகோலியவர். சென்னையில் 9 மேம்பாலங்களை மேயராக இருந்த காலத்தில் கொண்டு வந்தவர். பல மேலை நாடுகளுக்கு சென்று தான் கண்ட மேலை நாடுகளின் சுகாதாரத்தையும் பல தொழிற்சாலைகளையும் தமிழ்நாட்டிலும் செயல்படுத்திட முனைப்பு காட்டியதோடு, சென்னை டைட்டல் பார்க் உருவாக்குவதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர். 2006-ல் உள்ளாட்சித் துறை அமைச்சர், துணை முதலமைச்சர் என்று பொறுப்பேற்று தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு முதல்வர் கலைஞரின் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றியவர்.<br><br>முத்தமிழறிஞர் கலைஞர் மறைவிற்குப் பிறகு 2019 நாடாளுமன்ற தேர்தல், உள்ளாட்சி தேர்தல், 2021 சட்டமன்ற தேர்தல், ஊரக உள்ளாட்சி தேர்தல், 2022 நகராட்சி தேர்தல், 2024 பாராளுமன்ற | | |

| | | | |
|---|---|---|---|
| | தேர்தல் என்று தான் கழகத்தின் தலைவராக பொறுப்பேற்ற பிறகு வெற்றி மேல் வெற்றியாக தன் அயராத உழைப்பாலும், தோழமைக் கட்சித் தலைவர்களின் எண்ணோட்டத்திற்கு ஈடு கொடுத்தும் வெற்றியைக் குவித்து தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் குறிப்பாக மகளிர்கள் கல்வி வேலைவாய்ப்பில் முன்னேறவும் சாதி, மத வேறுபாடுகளற்ற சமுதாயத்தை உருவாக்கவும், இளைஞர்கள் வேலைவாய்ப்பினை உறுதி செய்திட பல வெளிநாட்டு தொழில் முனைவர்களை ஈர்த்து தமிழ்நாட்டில் தொழில் வளம் சிறக்க முனைப்பு காட்டி வருபவர் முதலமைச்சர் அவர்கள்.<br><br>இப்படி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமனப் பேராசிரியர் ஆகியவர்களின் ஆசியைப் பெற்று திராவிட மாடல் அரசை வழிநடத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் திரு. மு.க. ஸ்டாலின் அவ<br><br>ர்களை வணங்கி முதலமைச்சர் தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்களின் திருவுருவப்படத்தை இந்நகர மன்ற அவையிலே வைப்பதற்கு நகர மன்றத்தின் அனுமதிக்காக, மன்றம் அனுமதிக்கப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது. | | |
| 2 | இந்நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணி ரூ-350.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டில் நகர மன்ற கூட்டத்திற்கான டேபிள் மற்றும் நகரமன்ற தலைவருக்கான டேபிள் ஒதுக்கீடு செய்து மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை. எனவே இந்நகராட்சியில் தற்போதுள்ள நகரமன்ற தலைவர், துணைத் தலைவர் நீங்களாக உள்ள நகரமன்ற உறுப்பினர்கள் 22 பேருக்கு பதிலாக 30 பேர் வரை அமரும் வசதி கொண்ட டேபிள், Conference Hall Table மற்றும் சிவப்பு கம்பளம் பொருத்துவதற்கு ரூ.19.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | 279 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**ந.க.எண்.** /2024/இ1 | | |
| 3 | உளுந்தூர்பேட்டை நகராட்சி பண்ருட்டி சாலையில் அமைந்துள்ள மகளிர் மேல்நிலைப் பள்ளி தற்போது திருச்சி மெயின் ரோட்டில் புதியதாக மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட பழைய மகளிர் மேல்நிலைப் பள்ளி கட்டிடம் காலியாக உள்ளதால் அதனை பொது உபயோகத்திற்கு நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு –**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.** /2024/இ1 | 280 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |
| 4 | இந்நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு சேலம் நெடுஞ்சாலையில் இடம் தேர்வு செய்யப்பட்டது. மேற்கண்ட இடத்தின் அருகில் மயானம் உள்ளதால் மாற்று இடம் திருச்சி நெடுஞ்சாலையில் ஐடிஐ அருகில் உள்ள இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டிட பணி முடிவுற்று தற்போது பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் திருச்சி நெடுஞ்சாலையில் நகராட்சி அலுவலகத்திற்கு சுமார் 1.50 ஏக்கர் இடம் ஒதுக்கப்பட்டு நகராட்சி ஆணையர் பெயருக்கு பட்டா பெயர் | 281 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு –**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.** /2024/இ1 | | |
| 5 | உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பஞ்சாயத்து யூனியன் கட்டுப்பாட்டில் உள்ள துவக்கப்பள்ளி, மற்றும் நடுநிலைப் பள்ளிகளை நிர்வாக வசதிக்காக நகராட்சி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் அனுமதி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு –**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.** /2024/இ1 | 282 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |
| 6 | இந்நகராட்சிக்கு வார்டு எண். 13 அன்னை சத்யா தெருவில் ஏற்கனவே உள்ள பொது கிணறு சுற்றுச்சுவர் மிகவும் தாழ்வாக உள்ளதால் பொது மக்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் உள்ளதாக 13-வது வார்டு நகர மன்ற உறுப்பினர் கோரிக்கை மனு அளித்துள்ளார். அதனடிப்டையில் மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து கிணற்றின் சுற்றுச்சுவரை பாதுகாப்பு கருதி உயர்த்தி கட்டவும், இரும்பு கிரில் மூலம் மூடி அமைக்கவும், கிணற்றை தூர்வாரி மோட்டார் பொருத்தி பொதுமக்களுக்கு குடிநீர் சப்ளை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்துக்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம் | 283 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**ந.க.எண். /2024/இ1** | | |
| 7 | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு, நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் உத்திரவு ந.க.எண்.18484/2023/DO1 நாள்.14.03.2024-ல் 6வது மாநில நிதி குழு மான்யம் 2023-2024ம் ஆண்டிற்கு உளுந்தூர்பேட்டை நகராட்சி சர்வே எண்628/3,4 –ல் பேருந்து நிலையம் கிழக்குப்புறம் புதியதாக வணிக வளாக கடைகள் அமைக்க மதிப்பீடு தொகை ரூ.146.00 லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ள வணிக வளாகம் பழுதடைந்துள்ளதை இடித்து அப்புறப்படுத்த நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>:-**<br><br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.கஎண்.2190/2023/இ1** | 284 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |
| 8 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் இயக்கம் மற்றும் பராமரிப்பு திட்டம் 2019-2020 நிதியின் கீழ் ரூ-70.00 லட்சம் மதிப்பீட்டில் பிரகாசம் நகர் தொடர்ச்சி, உளுந்தாண்டார்கோயில் மற்றும் சிவகுருநாதர் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்க திரு.டி. முருகன் என்பவருக்கு 06.12.2019-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட மதிப்பீட்டில் உளுந்தாண்டார் கோயில் பகுதியில் பேவர் பிளாக் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு ரூ.1906725/- செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பணி துவங்கப்படாமல் நான்கு ஆண்டுகள் ஆகியும் பணி முடிக்கப்படாமல் உள்ளது. மேற்கண்ட பணிக்கு அறிவிப்பு அனுப்பி எந்தவித பயனும் இல்லாததால், | 285 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

தீர்மான எண்.153 நாள்.30.08.2023-ல் நகர மன்ற தீர்மானத்தில் பணியை ரத்து செய்ய அனுமதிக்கப்பட்டது. மேலும் நகர மன்ற தீர்மான எண்.229 நாள்.12.01.2024 -ல் ஏற்கனவே செலவு போக மீதமுள்ள தொகையில் பேவர் பிளாக் சாலையை மாற்றி சிமெண்ட் சாலையாக அமைக்க மேற்படி திட்ட நிதியிலேயே தொடர்ந்து பணிகள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி அளித்துள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு திருத்திய மதிப்பீட்டிற்கு அனுமதி வேண்டி முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர் வேலூர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.987/2024/ஆ1 நாள்.28.03.2024-ல் இயக்கம் மற்றும் பராமரிப்பு 2019-2020-ம் நிதியின் கீழ் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.50.93 லட்சத்திற்கு கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Formation of CC Road Sivagurunathar street(176003R060),Prakasam Nagar 3rd Road(176008R160),Prakasam Nagar 4th Road(176008R162) and Construction of Storm water drain & Culvert Palayapattu 5th street (176004R082) and Relaying of CCroad and Storm water drain Sivagurunathar street (176003R059) and Relaying of BT to CC Road & Storm water Drain & Culvert Palayapattu Road (176008R147), Palayapattu Road (176008R148),Palayapattu Road (176008R145) in Ulundurpet Municipality. | 50.93 |

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு</u>:-<br><br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.கஎண்.404 /2019/இ1</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>9</td>
<td>உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு, இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.748/2024/இ1 நாள்.14.03.2024- தூய்மை இந்தியா திட்டம் 2.0 2023-2024- (SBM) கீழ்க்கண்ட சமுதாயக் கழிப்பிடங்கள் சீரமைக்க மற்றும் இலவச கழிப்பிடவசதிகள் அமைக்க மதிப்பீடு தொகை ரூ.72.95 லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>பணியின் பெயர்</th><th>இருக்கைகளின் எண்ணிக்கை</th><th>மதிப்பீடு ரூ. இலட்சத்தில்</th></tr>
<tr><td colspan="4">சமுதாய கழிப்பிடங்கள் - 2023-2024</td></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண். 1 பாரிவள்ளல் தெருவில் சமுதாயக் கழிப்பிடம் சீரமைப்பு செய்தல்</td><td>4</td><td>4.60</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண். 4 சமுத்திரகுளம் சமுதாயக் கழிப்பிடம் சீரமைப்பு செய்தல்</td><td>12</td><td>5.40</td></tr>
<tr><td>3.</td><td>வார்டு எண். 5 உளுந்தூர் காலனியில் சமுதாயக் கழிப்பிடம் சீரமைப்பு செய்தல்</td><td>4</td><td>4.60</td></tr>
<tr><td>4.</td><td>வார்டு எண். 5 உளுந்தாண்டார் கோயில்</td><td>14</td><td>9.10</td></tr>
</table>
</td>
<td>286</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | காலனியில் சமுதாயக் கழிப்பிடம் சீரமைப்பு செய்தல் | | | | | |
| | | 5. | வார்டு எண்.6 உளுந்தாண்டார் கோயில் காலனியில் சமுதாயக் கழிப்பிடம் சீரமைப்பு செய்தல் | 14 | 10.85 | | | |
| | | 6. | வார்டு எண்.6 துர்கையம்மன் கோயில் சமுதாயக் கழிப்பிடம் சீரமைப்பு செய்தல் | 2 | 4.80 | | | |
| | | 7. | வார்டு எண்.8 பிரகாசம் நகரில் சமுதாயக் கழிப்பிடம் சீரமைப்பு | 14 | 9.10 | | | |
| | | 8. | வார்டு எண்.9 கைலாசக் குளத்தெருவில் சமுதாயக் கழிப்பிடம் சீரமைப்பு செய்தல் | 4 | 4.60 | | | |
| | | 9. | வார்டு எண்.12 வ.உ.சி தெருவில் சமுதாயக் கழிப்பிடம் சீரமைப்பு செய்தல் | 14 | 9.10 | | | |
| | | 10. | வார்டு எண். 14 உ.கீரனூர் காலனியில் சமுதாயக் கழிப்பிடம் சீரமைப்பு செய்தல் | 14 | 7.60 | | | |
| | | | **மொத்தம்** | **96** | **69.75** | | | |
| | | **இலவச ஆண்கள் சிறுநீர் கழிப்பிடம் -2023-2024** | | | | | | |
| | | 1. | வார்டு 12 – ஜீப்ளி தெருவில் இலவச ஆண்கள் சிறுநீர் கழிப்பிட வசதிகள் அமைத்து தருதல் | 8 | 2.56 | | | |
| | | 2. | வார்டு 14 – விருத்தாசலம் ஜங்ஷன் ரோட்டில் இலவச ஆண்கள் சிறுநீர் கழிப்பிட வசதிகள் அமைத்து தருதல் | 2 | 0.64 | | | |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>மொத்தம்</td><td>10</td><td>3.20</td></tr>
<tr><td></td><td>ஆக மொத்தம்</td><td>106</td><td>72.95</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>:-<br>
மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.கஎண்.748 /2024/இ1
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>11</td>
<td>
உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு, நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர் வேலூர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.910/2024/அ3 நாள்.08.03.2024- தூய்மை இந்தியா திட்டம் 2.0 2023-2024- (SBM) 6வது மாநிலம் உயர்மட்ட கூட்டம் நுண்ணுயிர் உரமாக்குதல் மையம் (MCC), பொருள் மீட்பு வசதி (MRF), கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ. இலட்சத்தில்</th></tr>
<tr><td>1.</td><td>உளுந்தூர்பேட்டை நகராட்சி டி.வி.எண் ரோடு பகுதியில் நுண்ணுயிர் உரமாக்குதல் மையம் (Micro Composting Centre) அமைத்தல்</td><td>57.50</td></tr>
<tr><td>2.</td><td>உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட டி.வி.என் ரோடு பகுதியில் பொருள் மீட்பு வசதி (Material Recovery Facilities) அமைத்தல்</td><td>42.50</td></tr>
</table>
</td>
<td>284</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | <table><tr><td></td><td>**மொத்தம்**</td><td>100.00</td></tr></table><br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.748 /2024/இ1** | | |
| 12 | உளுந்தூர்பேட்டை நகராட்சி மொத்தமுள்ள 24 வார்டுகளிலும் போதுமான குடிநீர் வசதி இல்லை என பொது மக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் நிலையில் உள்ளது. எனவே பொதுமக்களின் அன்றாட குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு மட்டிகை, ஆரிநத்தம், கூ.கள்ளக்குறிச்சி மற்றும் கெடிலம் ஆற்றுப்படுகையிலிருந்து குடிநீர் உந்தப்பட்டு தேசிய நெடுஞ்சாலை வழியாகவும் குடிநீர் உந்தப்பட்டு இந்நகருக்கு வருகிறது கெடிலம் ஆற்றிலிருந்து வரும் குடிநீர் திட்டமானது சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இதனால் தொடர்ந்து பைப்லைன் உடைப்பு ஏற்பட்டு பொது மக்களுக்கு போதுமான குடிநீர் வழங்க இயலவில்லை. மேலும் மட்டிகை, ஆரிநத்தம் மற்றும் கூ.கள்ளக்குறிச்சி குடிநீர் திட்டமானது சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டு தற்போது பைப்லைன் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு குடிநீர் பொதுமக்களுக்கு சீரான முறையில் சப்ளை செய்ய முடியாத சூழலில் உள்ளது. பொது மக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி கலந்தாலோசகர் (Consultant) மூலம் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாகம் மற்றும் டுபிட்கோ நிறுவனத்திற்கு நிதி ஒதுக்கீடு கோரி வழங்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் திட்ட மதிப்பீட்டில் குழாயை (Distribution Line) மாற்றி அமைக்க வழிவகை செய்யப்படவில்லை எனவும் ஏற்கனவே உள்ள குடிநீர் குழாய் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளதால், மதிப்பீட்டில் Distribution line ஐ சேர்த்து விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து வழங்க அறிவுறுத்தியுள்ளார்.<br>அதனடிப்படையில் மேற்கண்ட பணிக்கு தனியார் கலந்தாலோசகர் மூலம் விரிவான திட்ட | 288 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு தயார் செய்து வழங்கவும், அதற்கான செலவு தொகையை திட்ட மதிப்பீட்டில் சேர்த்து கொள்ளவும் தற்போது வருவாய் நிதியிலிருந்து கலந்தாலோசகருக்கான கட்டணத்தை செலுத்தவும் அரசு திட்ட நிதிபெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:-<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>3. மேற்கண்ட தொகையினை அரசு திட்டநிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்துக்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.** /2023/இ1 | | |
| 13 | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ள பிரசன்னபவன் ரெசிடென்சி நிறுவனத்தின் உரிமையாளர் திரு.ஜெயராமன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் திடீரென இறந்து விட்டதால், மேற்கண்ட காலை உணவு திட்டத்தை தொடர்ந்து நடத்த இயலவில்லை. மேற்கண்ட திட்டமானது அரசு திட்டம் தொடர்ந்து நடத்த வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்தத்தை தீர்மான எண்.260 நாள்.12.03.2024ன்படி ரத்து செய்யப்பட்டது. எனவே மேற்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரபெற்றதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | 289 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>நபர் ஒன்றுக்கு ரூபாய்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முதல்வரின் காலை சிற்றுண்டி வழங்கும் பணி</td><td>ஸ்ரீலட்சுமி கேட்ரிங் சர்வீஸ் உளுந்தூர்பேட்டை</td><td>நபர் ஒன்றுக்கு ரூ.12.65</td></tr>
<tr><td>திரு, தவப்புதல்வன் உளுந்தூர்பேட்டை</td><td>நபர் ஒன்றுக்கு ரூ.13.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு –
<ol>
<li>மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>மேற்காணும் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீலட்சுமி கேட்ரிங் சர்வீஸ் உளுந்தூர்பேட்டை என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>பட்டியல்படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
ந.க.எண்.748 /2024/இ1
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>14</td>
<td>இந்நகராட்சி பொறியாளருக்கு அலுவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட ஈப்பு வாகன எண்.TN15 E 4858 வாகனம் ஆயில் சென்சார்போர்டு பழுதடைந்துள்ளதால் பழுது நீக்கம் செய்ய SCHANGALAYA MOTOR விழுப்புரம் நிறுவனத்திற்கு அனுப்பி வைத்ததில் ஈப்பு வாகனத்தை சரிபார்த்து பட்டியலில் உள்ள தொகை செலுத்த கோரி தெரிவித்துள்ளார்கள். பட்டியலில் தெரிவித்துள்ள பொருட்கள் மாற்றப்பட்டு பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு ரூ.7570/- தொகை</td>
<td>290</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | செலுத்த கோரி மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேலும் பட்டியலோடு சரிபார்க்கப்பட்டது. எனவே மேற்கண்ட தொகை ரூ.7570/- ல் 2 சதவீதம் வருமான வரி ரூ.151/- போக ரூ.7419/-ஐ மேற்கண்ட நிறுவனத்திற்கு நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>3. அவசரம் அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டு தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.** 226 /2022/இ1 | | |
| 15 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்-2022-23 (KNMT)-ன்கீழ் உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட சமுத்திர குளம் சீரமைத்தல் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி சமுத்திர குளத்தில் உள்ள தண்ணீரை பரிசோதனை செய்து அதற்கான சான்று பண்ருட்டி அண்ணா பல்கலைகழத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தண்ணீர் பரிசோதனை செய்து சான்று வழங்கியமைக்கு ரூ.8496/- ஐ வழங்க கோரி பண்ருட்டி அண்ணா பல்கலைகழகத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை ரூ.8496/- ஐ நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்றம் | 291 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிக்கலாம்<br>3. அவசரம் அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டு தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 275 /2022/இ1** | | |
| 16 | இந்நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்ட அரசு முழு மான்யமாக ரூ-350.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு திருச்சி நெடுஞ்சாலையில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிடத்தில் நகராட்சி பெயர் பலகை, தமிழ் வாழ்க பெயர் பலகை மற்றும் அலுவலகத்தில் அனைத்து பிரிவிற்கும் பெயர்ப் பலகை அமைக்க மதிப்பீடு தொகை ரூ.3.25 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். /2024/இ1** | 292 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |
| 17 | இந்நகராட்சிக்கு புதியதாக அலுவலக கட்டிடம் திருச்சி நெடுஞ்சாலையில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. அலுவலகத்திற்கு தேவையான கம்ப்யூட்டர் பிரிண்டர் போதுமானதாக இல்லாததால் அலுவலக பணிகள் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி அலுவலகத்திற்கு புதியதாக கம்ப்யூட்டர், கலர் பிரிண்டர் Gem Rate- ல் சப்ளை செய்ய தோராய மதிப்பீடு தொகை ரூ.15.00 இலட்சத்துக்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம் | 293 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**ந.க.எண். /2024/இ1** | | |
| 18 | இந்நகராட்சிக்கு புதியதாக அலுவலக கட்டிடம் திருச்சி நெடுஞ்சாலையில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட கட்டிடத்திற்குInternet வசதி ஒவ்வொரு இருக்கைக்கும் ஏற்படுத்தி தருவதற்கு ரூ.40000/-க்கு உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. நகராட்சியில் அனைத்து பணிகளும் மின்னனு வாயிலாக நடந்து வருவதால் பணியை உடன் முடிக்க வேண்டிய அவசியத்தை கருதி மேற்கண்ட பணியை உடன் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவித்தை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**ந.க.எண். /2024/இ1** | 294 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |
| 19 | இந்நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணி ரூ-350.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி முடிக்கப்பட்டு பயன்பட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டில் நகர மன்ற கூட்ட அரங்கில் உள்ள நகரமன்ற தலைவர் டேபிள், சேர், நகரமன்ற துணைத் தலைவர் மற்றும் ஆணையருக்கான சேர் சப்ளை செய்ய மதிப்பீடு தொகை ரூ.5.90 இலட்சித்திற்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | 295 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **ந.க.எண்.        /2024/இ1** | | |
| 20 | உளுந்தூர்பேட்டை நகராட்சி 1 முதல் 24 வரையுள்ள தெருக்களில் உள்ள பிரதான குடிநீர் குழாய்களில் அடிக்கடி உடைப்பு மற்றும் அடைப்பு ஏற்பட்டு பொது மக்களுக்கு போதுமான குடிநீர் வழங்க இயலாமல் போகிறது. மேலும் உடைப்பு ஏற்படும் இடங்களில் பாதாள சாக்கடை கழிவு நீர் குடிநீரோடு கலக்கும் அபாயம் உள்ளது. மேலும் கெடிலம் மற்றும் ஆரிநத்தம், கூ.கள்ளக்குறிச்சி, மட்டிகையிலிருந்து இந்நகருக்கு வரும் பிரதான குடிநீர் குழாய் அவ்வப்போது உடைப்பு ஏற்பட்டு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க முடியவில்லை. எனவே குடிநீர் அத்தியாவசியம் கருதி 1 முதல் 24 வரையுள்ள வார்டுகளில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர் குழாய் உடைப்பை உடனுக்குடன் சரிசெய்யவும், மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மதிப்பீட்டு தொகை ரூ.9,80,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** –<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | 296 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |
| 21 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் தினசரி சேகரிக்கப்படும் திடக்கழிவுகள் நகராட்சி உரக்கிடங்கில் மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் என தரம் பிரிக்கப்பட்டு மக்காத குப்பைகளான பிளாஸ்டிக் கழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி தனியார் சிமெண்ட் ஆலைக்கு எரியூட்டும் ஊடு பொருட்களாக பயன்படுத்திட அனுப்பி வைக்கப்படுகிறது. மீதம் உள்ள மக்கும் குப்பைகள் இந்நகராட்சியின் மூலம் உரமாக தயாரிக்கும் நிகழ்வு மேற்கொள்ளப்படுகிறது. அதுசமயம் இதில் இருந்து அதிகப்படியான ஈக்கள் மற்றும் துர்நாற்றம் ஏற்படுவதை கட்டுப்படுத்திட TAMILNADU MEDICAL COUNCIL ன் | 297 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | அறிவுறுத்தலின்படி EM Solution பயன்படுத்தப்பட வேண்டும்.<br><br>இதன்படி மேற்காணும் EM Solution-ஐ தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்போஸ் இண்டிகோ சர்வீஸ் என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.12,00,000/-ற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு** :<br><br>1. பொதுசுகாதாரப் பணி என்பதால் மேற்காணும் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிகளுக்கான பட்டியல் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்: 1314/2024/H1 | | |
| 22 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் அறிவுரை கடிதம் ந.க.எண்.3679/2023/அ3 நாள்.08.11.2023ன்படி தூய்மை இந்தியா திட்டம், பொதுசுகாதாரம், குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை, வீட்டிற்கு ஒரு கழிவறை, டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை போன்றவை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட வழங்கப்பட்ட அறிவுரையின்படி உளுந்தூர்பேட்டை நகராட்சியின் மூலம் பேருந்து நிலையத்தில் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி வெங்கடாஜலபதி நாடக சபா, சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதற்கான தொகை ரூ.7500/- மேற்காணும் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு** :<br><br>1. மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம். | 298 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | ந.க.எண்: 0177/2024/H1 | | |
| 23 | உளுந்தூர்பேட்டை நகராட்சியின் புதிய அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இப்புதிய அலுவலகத்திற்கு தேவையான அலுவலக பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் பொது சுகாதாரப் பயன்பாட்டுப் பொருட்கள் போன்றவைகளை தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்போஸ் இண்டிகோ சர்வீஸ் என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.84200/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு :**<br><br>**1.** மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.<br>மன்றம் அனுமதிக்கலாம் | 299 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |
| 24 | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு 2024-2025 ஆம் ஆண்டுக்கு தேவையான எழுது பொருட்கள், A4 பேப்பர், A3 பேப்பர், Legal பேப்பர், File Pad, Wrapper Sheets, சொத்துவரி, குடிநீர் வரி, காலிமனை வரி இரசீதுகள், துறைரீதியான பில் புத்தகங்கள், பதிவேடுகள், படிவங்கள், இதர கணினி உபகரணங்கள் மற்றும் டோனர்கள் ஆகியவை தேவைப்படுகிறது. அலுவலக அவசியம் கருதி அப்பொருட்கள் கொள்முதல் செய்ய தேவையான உத்தேச செலவினம் ரூ.10,00,000/- ஐ பொது நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**:மன்றம் அனுமதிக்கலாம்<br><br>1. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்: 1329/2024/D1 | 300 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |
| 25 | உளுந்தூர்பேட்டை நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது | 301 | **மன்றம்** |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட நகராட்சி கட்டிடத்தில் சிசிடிவி கேமரா, டிவி மற்றும் இதர பொருட்கள் உட்பட பணிகள் மேற்கொள்ள ரூ.4.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | | **அனுமதிக்கப்பட்டது** |
| 26 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.24608/2022/EA1, நாள்.13.02.2024-ன் படி உளுந்தூர்பேட்டை நகராட்சிப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை மறுகணக்கீடு செய்யும் பொருட்டு குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களை கணக்கெடுக்கும்படி இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.079/2022/H1 நாள்.22.04.2024-ன்படி உத்தரவிடப்பட்டது. அதன்பேரில் இந்நகராட்சிப்பகுதிகளில் வரிவிதிப்பு செய்யப்பட்ட குடியிருப்புகள் மற்றும் வரிவிதிப்பு செய்ய இயலாத குடியிருப்புகள் சேர்த்து 8733 குடியிருப்புகள் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் வரிவிதிப்பு செய்யப்பட்ட வணிக நிறுவனங்கள் மற்றும் வரிவிதிப்பு செய்யப்பட வேண்டிய வணிக நிறுவனங்கள் சேர்த்து 2179 வணிக நிறுவனங்கள் கண்டறியப்பட்டுள்ளது. உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் தனியார் வெளிக்கொணர்வுமுகமை (Out Sourcing) மூலம் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.33553/2022/EA2-SWM-22 நாள்.10.01.2023ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் உரிய நடைமுறைகளின் படி OUR LAND ENGINEERING WORKS PRIVATE LIMITED என்ற நிறுவனத்திற்கு 6362 குடியிருப்புகள் மற்றும் 1135 வணிக நிறுவனங்களில் திடக்கழிவுகள் சேகரிக்கும் பணிக்காக 01.06.2023 | 302 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | முதல் மூன்று ஆண்டுகள் பணி செய்ய பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள 9.62 மெ.டன் எடையுள்ள திடக்கழிவுகளுடன் தற்சமயம் கூடுதலாக உற்பத்தியாகும் திடக்கழிவுகள் 3.17 மெ.டன் உடன் சேர்த்து ஆகமொத்தம் 12.79 மெ.டன் எடையுள்ள திடக்கழிவுகளை சேகரம் செய்து செயலாக்கம் செய்யும் இடத்திற்கு கொண்டு செல்லும் பொருட்டு மேற்கண்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தப்பணிகளை 16.06.2024 முதல் புதுப்பித்துக்கொள்ளவும் மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் உத்தரவின்படியும் இந்நகராட்சி ஒப்பந்த ஆவணங்கள் அத்தியாயம் – VIII பிரிவு 9.3.C-ன்படியும் டன் ஒன்றிற்கு 10 சதவீதம் கூடுதலாக (4857.09 + 485.70 = 5342.79) 5342.79 வீதம் 12.79 மெ.டன் தினசரி உற்பத்தியாகும் திடக்கழிவுகளை அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ((12.79 X 5342.79 X 365) + 18% GST) = ரூ.2,94,31,576 /-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு :**<br><br>1. பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும், பொது சுகாதாரப்பணி என்பதாலும் OUR LAND ENGINEERING WORKS PRIVATE LIMITED என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தினை ஓராண்டு நீட்டிப்பு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிகளுக்கான பட்டியல் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்: 079 /2022/H1 | | |

**நகர மன்ற தலைவர்**

**உளுந்தூர்பேட்டை நகராட்சி**